# சட்டவரைஞர் திணைக்களம்

**2013**

**செயல்நிறைவேற்றுகை அறிக்கை**

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதற்கு அரசாங்கத்திற்குத் துணைபுரிவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல்.

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் துணைபுரிவதற்காக அரசியலமைப்பிற்கிணங்க சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சட்டவாக்கத்தை வரைதல்.

## அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம், "A" தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. 2010 ஏப்பிறல் 30ஆந் தேதிய 1651/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இத்திணைக்களம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கும் இணங்கப் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். இந்நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை இயற்றுவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதனையும் உள்ளடக்கும். அமைச்சுக்களின் கீழ் அடங்குகின்ற அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

### 1. சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைஞர் திணைக்களத்தின் பணிகள்:

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதல்.

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் அவசியமானவிடத்து, அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டமூலங்கள் தொடர்பாகச் சட்ட மதியுரையை வழங்குதல்.

(4) சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(5) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(6) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

(7) இயைபான துறைசார் அமைச்சுக்களின் ஒத்துழைப்புடனும் அங்கீகாரத்துடனும் சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான அரசாங்கக் கொள்கைகளைத் தோதானவாறு மீளவமைத்து செயல்முறைக்குகந்தவாறும் வெற்றிகரமாகவும் அத்தகைய கொள்கைகளை அமுலாக்குவதனை இயலச்செய்தல்.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களை, அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின் மீது மற்றும் அவற்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் (ஒன்றில் முதனிலை, திருத்த அல்லது துணைநிலை) வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மூன்றுமொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## 2. பணியாட்டொகுதியினர்

இத்திணைக்களத்தின் பணியாட்டொகுதியினர் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்கோப்பு 151 ஆகும்; ஆயினும், 2013ஆம் ஆண்டில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்கோப்பு 79 ஆகவிருந்தது.

| தொழிலின் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலில் இருந்த ஊழியர் கோப்பு |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 37 | 27 |
| மூன்றாம் நிலை மட்டம் | 28 | 04 |
| இரண்டாம் நிலை மட்டம் | 62 | 28 |
| முதனிலை மட்டம் | 24 | 20 |

## 2013.12.31 அன்றுள்ளவாறு சட்டவரைநர் திணைக்களத்தின் ஊழியர் கோப்பு

| சிரேட்ட மட்டம் | | | மூன்றாம்நிலை மட்டம் | | | இரண்டாம்நிலை மட்டம் | | | முதனிலை மட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது |
| சட்டவரைநர் | 01 | 01 | நிருவாக அலுவலர் | 01 | 01 | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | சாரதி | 10 | 07 |
| மேலதிகச் சட்டவரைநர் | 01 | 01 | பிரதான மொழி பெயர்ப்பாளர் | 02 | 02 | கணக்கு உதவியாளர் | 01 | 01 | கே.கே.எஸ் (KKS) | 14 | 13 |
| பிரதிச் சட்டவரைநர் | 05 | 05 | மொழி பெயர்ப்பாளர் | 24 | 01 | நூலகப் பொறுப்பாளர் | 01 | 01 | | | |
| சிரேட்ட உதவிச் சட்டவரைநர் | 08 | 03 | தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்ப அலுவலர் | 01 | - | முகாமை உதவியாளர் | 28* | 24 | | | |
| உதவிச் சட்டவரைநர் | 20 | 16 | | | | ஆவணப் படுத்துகை உதவியாளர் | 20 | - | | | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | | | - | பதிப்பாசிரியர் | 11 | 01 | | | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | -- | | | | | | | | | |
| கூட்டுமொத்தம் | 37 | 27 | | 28 | 04 | | 62 | 28 | | 24 | 20 |
| மொத்தம் | | | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 151 | | | | உள்ளபடியான எண்ணிக்கை 79 | | | |

* 28 முகாமைத்துவ உதவியாளர்களைக் கொண்ட ஊழியர் கோப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 20 ஆவணப்படுத்துகை உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது; அவர்கள் ஆட்சேர்க்கப்பட்டதும் முகாமைத்துவ உதவியாளரின் ஊழியர் கோப்பு 20 ஆகக் குறைக்கப்படும்.

## இத்திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்

இத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 151 ஆகும். எவ்வாறாயினும், இத்திணைக்களம், 2013 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் அதற்கு உதவுவதற்கு 79 நிரந்தர ஊழியர்களை மட்டுமே கொண்டிருந்தது. கீழே காட்டப்பட்டுள்ளவாறு தொழிலின் பல்வேறு மட்டங்களில் நிரப்பப்படுவதற்கு 72 வெற்றிடங்கள் உள்ளன:-

**சிரேட்ட மட்டம்**

(அ) சிரேட்ட மட்டத்தில், சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் பதவியில் ஐந்து வெற்றிடங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு இசைந்தொழுக சொல்லப்பட்ட பதவிக்குத் தகைமை கொண்டுள்ள உதவிச் சட்டவரைஞர்கள் எவரும் இல்லாமையினால், அத்தகைய வெற்றிடங்களைத் தற்போது நிரப்பமுடியாது.

(ஆ) உதவிச் சட்டவரைஞர் பதவியில் நான்கு (04) வெற்றிடங்கள் உள்ளன. அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) இலங்கை நிருவாகச் சேவையில் வகுப்பு II/III இனைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவியில் இப்போதுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கான அலுவலரொருவருக்காகக் கோருகின்ற எழுத்திலான கோரிக்கையொன்று பொதுநிருவாக அமைச்சருக்கு விடுக்கப்பட்டுள்ளது. பொருத்தமான அலுவலரொருவர் கிடைக்கக்கூடியதாக வரும் போது சொல்லப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூன்றாம் நிலை மட்டம்**

மொழிபெயர்ப்பாளர் பதவியில் 23 வெற்றிடங்கள் உள்ளன. மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்த்தல் தொடர்பில் தற்போது ஏற்புடையதாகவுள்ள வயதெல்லையைத் திருத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறும் நோக்கத்துக்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்திலான வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் பெறப்படுவதன் மேல் ஆட்சேர்ப்புக்களைத் தொடங்க முடியும்.

**இரண்டாம் நிலை மட்டம்**

பதிப்பாசிரியர்/ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியில் முப்பது (30) வெற்றிடங்கள் உள்ளன. இயைபான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமில்லாமல் ஆட்சேர்ப்புகளைச் செய்யமுடியாது. எவ்வாறாயினும், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் ஆட்சேர்ப்புகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

**முதனிலை மட்டம்**

அலுவலக உதவியாளர் சேவையில் ஒரு (1) வெற்றிடமுள்ளது. சொல்லப்பட்ட வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**3. இத்திணைக்களத்தின் பிரிவுகள்**

இத்திணைக்களமானது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்கு பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

சட்ட வரைதற் பிரிவு.

தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவு

வெளியீட்டுப் பிரிவு

கணக்குப் பிரிவு

## சட்ட வரைதற் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறாகும்:-

- அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதல்.
- புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் மற்றும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் எனச் சட்டமூலங்களை மும்மொழிகளிலும் வரைதல்.
- சட்டமூலங்கள் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்.
- சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.
- மாகாணசபைகளுக்கான நியதிச்சட்டங்களை வரைதல்.

**<u>2013 ஆம் ஆண்டு தொடர்பான வரைவுச் சட்டமூலங்கள் பற்றிய விபரங்கள்</u>**

| | வரைதல் (ஆண்டின் தொடக்கத்தில்) | ஆண்டின் போது திறத்தவர்களிட மிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏலவேயுள்ள சட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் | மொத்தம் | தயாரிக்கப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குக் கையளிக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | மூடிவிடப்பட்ட கோப்புகள் | இணைந்த கோப்புகள் | வரைதல் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய சட்டமூலங்களையும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களையும் வரைதல் | 154 | 49 | 3 | 206 | 46 | 6 | - | 154 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | 63 | 43 | 8 | 114 | 19 | - | - | 95 |
| மாகாணசபை நியதிச்சட்டங்கள் | 18 | 2 | - | 20 | - | - | - | 20 |
| துணைநிலைச் சட்டவாக்கங்கள் (கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் முதலியன) | 73 | 13 | 93 | 179 | 77 | 1 | - | 101 |

## 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள்

| சுட்டி இல. | சட்டத்தின் பெயர் | | |
|---|---|---|---|
| 01 | 01/2013 | சவலூ 13/2013 | வாழ்வின் எழுச்சி |
| 02 | 02/2013 | சவலூ 51/2011 | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) |
| 03 | 03/2013 | சவலூ 30/2012 | பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்) |
| 04 | 04/2013 | சவலூ கூட். 1/2012 | இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தம்) |
| 05 | 05/2013 | சவலூ 12/2013 | துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) |
| 06 | 06/2013 | சவலூ 01/2013 | பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தம்) |
| 07 | 07/2013 | சவலூ 08/2013 | மதுவரி (திருத்தம்) |
| 08 | 08/2013 | சவலூ 10/2013 | தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தம்) |
| 09 | 09/2013 | சவலூ 24/2013 | சுங்கம் (திருத்தம்) |
| 10 | 10/2013 | சவலூ 41/2012 | மீளக் குடியமர்த்துதல் அதிகாரசபை (திருத்தம்) |
| 11 | 11/2013 | சவலூ 07/2013 | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) |
| 12 | 12/2013 | சவலூ 05/2013 | நிதி |
| 13 | 13/2013 | சவலூ 20/2013 | நொத்தாரிசு (திருத்தம்) |
| 14 | 14/2013 | சவலூ 19/2013 | அற்றோணித்தத்துவம் (திருத்தம்) |
| 15 | 15/2013 | சவலூ 14/2013 | நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) |
| 16 | 16/2013 | சவலூ 11/2013 | செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தம்) |
| 17 | 17/2013 | சவலூ 02/2013 | சேர் பெறுமதி வரி (திருத்தம்) |
| 18 | 18/2013 | சவலூ 13/2013 | உண்ணாட்டரசிறை (திருத்தம்) |
| 19 | 19/2013 | சவலூ 03/2013 | பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) |
| 20 | 20/2013 | சவலூ 09/2013 | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) |
| 21 | 21/2013 | சவலூ 18/2013 | ஆவணப் பதிவு (திருத்தம்) |
| 22 | 22/2013 | சவலூ 06/2013 | திருமணப் பதிவு (திருத்தம்) |
| 23 | 23/2013 | சவலூ 15/2013 | கண்டியத் திருமண மணநீக்க (திருத்தம்) |
| 24 | 24/2013 | சவலூ 16/2013 | முஸ்லிம் திருமண மணநீக்க (திருத்தம்) |
| 25 | 25/2013 | சவலூ 17/2013 | பிறப்புகள், இறப்புகள், பதிவு (திருத்தம்) |

| | | | |
|---|---|---|---|
| 26 | 26/2013 | சவஓ கூட். 20/2011 | ஹங்குரன்கெத மாதன்வல ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 27 | 27/2013 | சவஓ 32/2013 | தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) |
| 28 | 28/2013 | சவஓ 03/2012 | பாராளுமன்றப் புலமைப் பரிசில் சபை (நீக்கம்) |
| 29 | 29/2013 | சவஓ 17/2012 | பாதுகாப்புச் சேவை ஏவுகை மற்றும் பணியாட்டொகுதிச் சேவைக் கல்லூரி (திருத்தம்) |
| 30 | 30/2013 | சவஓ 31/2012 | உள்ளூரதிகார சபைகளில் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) |
| 31 | 31/2013 | சவஓ 21/2009 | இலங்கை மின்சாரம் (திருத்தம்) |
| 32 | 32/2013 | சவஓ 20/2012 | விஞ்ஞான, தொழினுட்பவியல் அபிவிருத்தி (திருத்தம்) |
| 33 | 33/2013 | சவஓ 17/2011 | விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான சமவாயம் |
| 34 | 34/2013 | சவஓ 27/2012 | பௌத்த அறநிலையங்கள் (திருத்தம்) |
| 35 | 35/2013 | சவஓ 01/2012 | கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) |
| 36 | 36/2013 | சவஓ 44/2013 | ஒதுக்கீடு |

குறிப்பு:

- ‘‘ச.வ.ஓ.’’ என்பது, புதிய சட்டவாக்கங்களுக்கான வரைவுச் சட்டமூலங்களும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களுக்கான திருத்தங்களும் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது;
- ‘‘ச.வ.ஓ. கூட்.’’ என்பது, கூட்டிணைத்தல்களுக்கான வரைவுச் சட்ட மூலங்கள் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது.

**தாபன மற்றும் நிருவாகப் பிரிவு**

இப்பிரிவு, பணியாட்டொகுதியினரின், ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் பயிற்சி, திறமைத் தடைகாண் பரீட்சைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கருமங்கள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான கருமங்கள் அத்துடன் இத்திணைக்களத்திலுள்ள எல்லா நிறுவனஞ்சார், நிருவாகக் கருமங்கள் தொடர்பான கருமங்கள் என்பவற்றைக் கையாளுகின்றது.

(1) <u>ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்றக் கட்டுப்பாடு:</u>

i இப்பிரிவு, சட்டவரைஞைர், மேலதிகச் சட்டவரைஞர், பிரதிச் சட்டவரைஞர்கள் என்ற பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அந்தந்தத் தரங்களுக்கு அலுவலர்களுக்குப் பதவியுயர்வுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தது.

ii சாரதிப் பதிவியில் 04 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

iii ஒரு சட்ட அலுவலருக்குக் குற்றச்சாட்டுப் பத்திரம் சேர்ப்பிக்கப்பட்டு அவருக்கெதிரான ஒழுக்காற்று விசாரணை இப்போது முடிவுறாதுள்ளது.

iv நிரந்தர ஊழியர்கோப்பில் மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படும்வரை, ஓர் எழுத்துப்பரீட்சையின் பெறுபேறுகளின் மீது மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் மொழிபெயர்ப்பாளர்கள் குழாமொன்று அமைக்கப்பட்டது.

(2) <u>பயிற்சி:</u>

**உள்நாட்டுப் பயிற்சி.**

அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி பின்வருமாறாகும்:

i <u>பகிரங்க நிதித் திணைக்களம் (மிலோதா)</u>
முகாமை உதவியாளர்கள் சேவை - 01

ii <u>பகிரங்க சேவைப் பயிற்சி நிறுவகம்</u>
முகாமை உதவியாளர்கள் சேவை - 02

iii <u>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்</u>
சட்ட அலுவலர்கள் - 06
முகாமை உதவியாளர்கள் சேவை - 03
கே. கே. எஸ். (K.K.S.) - 01

iv <u>பகிரங்கக் கணக்குகள் திணைக்களம்</u>

| | |
|---|---|
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 04 |

v <u>அரச கருமமொழித் திணைக்களம்</u>

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 01 |

vi <u>தேர்ச்சி அபிவிருத்தி மன்றம்</u>

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 01 |
| பதவி நிலை அலுவலர்கள் | - 01 |
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 02 |
| கே. கே. எஸ். (K.K.S.) | - 07 |

மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களைத் தவிர, சட்ட அலுவலர்களும் ஏனைய பதவிநிலை அலுவலர்களும் 07 உள்நாட்டுச் செயலமர்வுகளிலும் 07 உள்நாட்டுக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றினர்.

மேலும், உதவிச் சட்டவரைஞர்கள் தமது சட்ட வரைதற் பணியைக் கூடுதல் வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதனை இயலச் செய்யும் வகையில் அவர்களுக்கு விசேட ஆங்கில அறிவைப் புகட்டுவதற்கு உயர்தரத் தொழில் முறை எழுத்துப் பயிற்சியில் ஒரு மாத விசேட உட்சேவை நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இத்திணைக்களத்தின் பணி, கூடுதல் பயனுள்ள வகையில் புரியப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கென, கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டப் பீடத்தினால் நடாத்தப்பட்ட சட்டத்தில் பட்டப்பின் பட்டத்துக்கான கற்கைநெறியொன்றைத் தொடர்வதற்கு (2013 – 2014) 4 சட்ட அலுவலர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடியதனைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கை நூலகக் கழகத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கொன்றில் நூலகப் பொறுப்பாளர் பங்குபற்றினார்.

**வெளிநாட்டுப் பயிற்சி**

i. சட்டவரைஞர், ஒரே நேரத்தில் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவரசு சட்ட மாநாட்டிலும் மற்றும் சட்டவரைஞர்கள் மாநாட்டிலும் பங்குபற்றினார்.

ii. மேலதிகச் சட்டவரைஞர், பங்களாதேஷில் நடைபெற்ற சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பான செயலமர்வொன்றில் பங்குபற்றினார்.

iii. சிரேட்ட சட்டவரைஞர்களுள் ஒருவர் இந்தியாவில் நடைபெற்ற சட்டவாக்க வரைதலிலான கற்கையொன்றில் பங்குபற்றினார்.

இன்னுமொரு சிரேட்ட சட்டவரைஞர், ஐக்கிய அமெரிக்க நாடுகள், நியூ ஓர்லியன்ஸில் நடைபெற்ற சட்டவாக்க வரைதலிலான கற்கை நெறியொன்றில் பங்குபற்றினார்.

## சட்டவரைஞர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு மாநாடுகளும் கருத்தரங்குகளும் . 2013

| | மாநாட்டின் பெயரும் ஓம்பு நாடும் | பங்குபற்றுநரின் பெயர் |
|---|---|---|
| 1. | சட்டவாக்கச் சட்டவரைஞர்களின் பொதுநலவரசு மாநாடு –<br>தென் ஆபிரிக்கா<br><br>18ஆவது பொதுநலவரசு சட்ட மாநாடு, 2013 – தென் ஆபிரிக்கா | திரு. ஜீ. எஸ். ஏ. டி சில்வா<br>சட்டவரைஞர் |

## சட்டவரைஞர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயிற்சி . 2013

| | பயிற்சியினை நடாத்திய நாட்டினது பெயர் | பங்குபற்றும் அலுவலரின் பெயர் |
|---|---|---|
| 1. | சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் 23 ஆவது தெற்கு ஆசியப் போதனை அமர்வு – பங்களாதேஷ் | திருமதி டீ. எஸ். குமாரஜீவ, மேலதிகச் சட்டவரைஞர் |
| 2. | சட்டவாக்க வரைதலில் சர்வதேசப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - இந்தியா | திருமதி எஸ். எஸ். எம். டீ. ஈ. வீரகோன், சிரேட்ட உதவிச் சட்ட வரைஞர் |
| 3. | சட்டவாக்க வரைதலில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | திருமதி. டீ. டீ. வீரக்கொடி, சிரேட்ட உதவிச் சட்ட வரைஞர் |

### (3) ஏனைய நிறுவனஞ்சார் மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்

i. தேசிய, சர்வதேசச் சட்டங்களில் அலுவலர்களுக்கு அறிவு வழங்கும் Iஆம் தர நூலகத்தை இத்திணைக்களம் கொண்டுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளியிடப்படட மொத்தத்தில் 14 சட்டப் புத்தகங்கள் 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ii. இத்திணைக்களத்தில் சேமநலச் சங்கமொன்று உண்டு. 2013 ஆம் ஆண்டில் இச்சங்கம், பணியாட்டொகுதி உறுப்பினர்களிடையே ஒருமைப்பாட்டை அதிகரிப்பதற்கான சுற்றுலாக்களையும் அவர்களின் ஆன்மீக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட மத நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்குபடுத்தியது. அதன் உறுப்பினர்களின் நிதித் தேவைகளில் உதவுவதற்குச் சங்கத்தினால் அவர்களுக்குக் கடன்வசதிகளும் வழங்கப்பட்டன.

iii. சட்ட அலுவலர்களின் சேமநலத்துக்காகச் சட்ட அலுவலர்கள் கழகமொன்று உண்டு. இக்கழகம், அலுவலர்களின் ஏனைய சேமநலத் தேவைகளைக் கவனிக்கும் அதேவேளையில் அலுவலர்களின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்கும் உதவுகின்றது.

iv. இத்திணைக்களத்தினுள் உள்ள எல்லாக் கணிணிகளும் ஒரு வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் எல்லாப் பதவிநிலை அலுவலர்களுக்கும் ஏனைய தகவுடைய அலுவலர்களுக்கும் கணிணிகளும் இணைய வசதியும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய அலுவலர்களுக்கும் கணிணிகளுக்கும் இணைய வசதிக்குமான அணுகுகை வழங்கப்பட்டுள்ளது. புதியதொழினுட்பவியலைப் பயன்படுத்துவதற்கு எல்லா அலுவலர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இத்திணைக்களம் e-Governance கொள்கையை அமுலாக்கியுள்ளது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவானது, (புதிய சட்டவாக்கங்களினதும் திருத்தச் சட்டவாக்கங்களினதும்) எல்லா வரைவுச் சட்டமூலங்களையும் மற்றும் சட்ட வரைதற் பிரிவினால் ஆங்கிலத்தில் மீளாய்வு செய்யப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் இயைபான மொழிகளில் மொழிபெயர்ப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. தாபன, நிருவாக மற்றும் கணக்குப் பிரிவுகளினால் அனுப்பப்பட்ட அலுவலகமுறையான ஆவணங்களைத் தேவைப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## வெளியீட்டுப் பிரிவு

வரைவுச் சட்டமூலங்களினதும் துணைநிலைச் சட்டவாக்கங்களினதும் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளை ஒப்புநோக்குவதற்கும் சரிபார்ப்பதற்கும், அரசாங்க அச்சகரினாலும் பாராளுமன்றத்தினாலும் அனுப்பிவைக்கப்பட்ட இயைபான ஒப்புநோக்கற் பிரதிகளை வரைவுகளின் கையெழுத்துப் பிரதிகளுடன் வாசிப்பதற்கும் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. சட்ட அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய ஒப்புநோக்கற் பிரதிகள் பதிப்பிக்கப்படுமிடத்து அரசாங்க அச்சகருடனும் பாராளுமன்றத்துடனும் ஒருங்கிணைவதற்கும் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலங்கள் வெளியிடப்படுதல் தொடர்பான கருமங்களைப் புரிவதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுமுள்ளது.

## கணக்குப் பிரிவு

### 015 சட்டவரைநர் திணைக்களம்

### 2013.01.01 – 2013.12.31 என்ற காலப்பகுதிக்கான

### செலவினம்

தலைப்பு : 015 - சட்டவரைநர்

நிகழ்ச்சித்திட்டம் : 01 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 01 பொது நிருவாகமும் சட்டவாக்கங்களை வரைதலும்

(அ) 2013.01.01 முதல் 2013.12.31 வரையிலான மீண்டுவருஞ் செலவினம்

| **மீண்டுவருஞ் செலவினத்தின் விபரங்கள்** | **வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா)** | **தேறிய ஏற்பாடு (ரூபா)** | **மொத்தச் செலவினம் (ரூபா)** |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 38,290,000 | 38,290,000 | 34,587,149 |
| ஏனைய செலவினம் | 20,765,000 | 29,765,000 | 24,330,269 |
| மொத்த மீண்டுவருஞ் செலவினம் | **59,055,000** | **68,055,000** | **58,917,418** |

2013.01.01 முதல் 2013.12.31 வரையிலான மூலதனச் செலவினம்

| **மூலதனச் செலவினத்தின் விபரங்கள்** | **வரவுசெலவுத் திட்ட ஏற்பாடு (ரூபா)** | **தேறிய ஏற்பாடு (ரூபா)** | **மொத்தச் செலவினம் (ரூபா)** |
|---|---|---|---|
| **மூலதனச்சொத்துக்களை மறுசீரமைத்தலும் சீராக்குதலும்**<br>2001 – கட்டடமும் நிர்மாணங்களும் | 50,000 | 50,000 | 41,714 |
| **மூலதனச்சொத்துக்களைக் கொள்ளுதல்**<br>2102 – தளபாடமும் அலுவலகச் சாதனங்களும் | 500,000 | 500,000 | 209,600 |
| **மனிதவள அபிவிருத்தி**<br>2401 – அலுவலகப் பணியாட்டொகுதியினருக்குப் பயிற்சியளித்தல் (அ) | 7,000,000 | 7,000,000 | 3,523,226 |
| **ஏனைய மூலதனச் செலவினம்**<br>2502 - முதலீடுகள் - சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் | 3,000,000 | 3,000,000 | 2,310,810 |
| **இலங்கைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்**<br>2502 - முதலீடு | 40,000,000 | 40,000,000 | -- |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **50,550,000** | **50,550,000** | **6,085,350** |

(ஆ) 2013.01.01 முதல் 2013.12.31 வரையிலான வருவாய்க் கணக்கு

| விவரணம் | மதிப்பிடப்பட்ட வருவாய் (ரூபா) | வருவாய் (ரூபா) |
|---|---|---|
| வட்டி - ஏனையவை | 550,000 | 3,433,466.41 |

(இ) முற்பணக் கணக்கு – 015011

(2013.01.01 – 2013.12.31)

| | செலவினத்தின் ஆகக்கூடிய வரையறை (ரூபா) | வரவுகளின் ஆகக்குறைந்த வரையறை (ரூபா) | பற்றுமீதியின் ஆகக்கூடிய வரையறை (ரூபா) |
|---|---|---|---|
| 2013 மதிப்பீடு | 5,300,000 | 2,000,000 | 24,000,000 |
| நி.ஒ.503(1) - 2013.12.31 அன்று உள்ளவாறான சீர்செய்தல்களுக்கு முன்னர் | 3,740,551 | 5,371,417 | 12,532,391 |

<u>நிறுவனத்தின் செயல்நிறைவேற்றம் பற்றிய சுருக்கம்</u>

சட்டவரைஞர் திணைக்களத்தின் முதனிலைப் பணியானது அரசியலமைப்புக்கு ஒத்ததாகவுள்ள வகையில் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றம்செய்வதாகும். புதிய சட்டவாக்கங்களை வரைதல், ஏற்கனவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதல், சட்டவாக்கங்களைத் திரட்டுதல் மற்றும் துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல் என்பவற்றை இந்நடைமுறை கொண்டதாகவுள்ளது. வரைவுச் சட்டமூலங்களைப் பரீசீலனைசெய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றுதலும், சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்தில் சமுகமாயிருந்து பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படு உள்ளிட்ட, குறித்த சில வேறு கடமைகளும் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மேலும், துணைநிலைச் சட்டவாக்கங்களைத் தயாரித்தல் தொடர்பாக அமைச்சர்களுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இத்திணைக்களம் சட்ட ஆலோசனையையும் வழங்குகின்றது.

சட்டவரைதற் பிரிவின்கீழ் 2013 ஆம் ஆண்டுக்கு இயைபான சட்டங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்
பத்தரமுல்ல.

**ஒதுக்கீட்டுக் கணக்கு-2013**
**தலைப்பு இல.15- சட்டவரைஞர் திணைக்களம்**

மேற்குறிப்பிடப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குடன் சேர்த்தனுப்பப்பட்ட 2014.05.23 ஆந் தேதிய கணக்காய்வுக் கேள்விகள் தொடர்பாக, பின்வரும் விளக்கத்தை அளிக்கமுடியும்.

01. 2 செலவினத் தலைப்புக்களின் கீழ் குறித்தளிக்கப்பட்ட 40,010,000.00 ரூபாவான முழுத்தொகையும் செலவிடப்படாமல் இருந்தமைக்கான காரணம் கீழே வருமாறு விளக்கப்படுகின்றது:-

| செலவினத் தலைப்பு | நிதி ஏற்பாடுகள் | செலவுகள் | மீதி | நிதியேற்பாடுகளின் பகுதி செலவிடப்படாமல் எஞ்சியிருந்தமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| 15-1-1-1401 | 10,000 | - | 10,000 | கட்டிடங்களைத் திருத்துதலுடன் சம்பந்தப்பட்ட வேலையின் போது போக்குவரத்து செலவொன்று எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இயைபான உடன்படிக்கைகளை கையொப்பமிடுவதிலான தாமதம் காரணமாக அத்தகைய திருத்த வேலைகள் எழவில்லை. |
| 15-1-1-2502 | 40,000,000 | - | 40,000,000 | சட்டவாக்கங்களைத் திரட்டுதலும் மீளாய்வுசெய்தலும் தொடர்பான கருத்திட்டத்துக்காக இந்நிதியேற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டன. வரைவு அமைச்சரவைக் குறிப்பறிக்கை பூர்த்திசெய்யப்படாமை காரணமாகச் சொல்லப்பட்ட கருத்திட்டம் தாமதமானதால், அத்தகைய நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கான அவசியம் எழவில்லை. |
| மொத்தம் | 40,010,000 | - | 40,010,000 | |

02. 4 செலவீனத் தலைப்புக்களுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட 13,175,000/- ரூபாயிலிருந்து எஞ்சியிருந்த 8,010,735/- ரூபாவான மீதிக்காகப் பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகின்றது:-

| செலவினத் தலைப்பு | நிதியேற்பாடு | மீதி | நிதியேற்பாடுகளின் பகுதியளவிலான பாவனைக்கான காரணங்கள். |
|---|---|---|---|
| 15-1-1-1405 | 5,300,000 | 4,050,559 | பதிப்பாசிரியர், ஆவணப் படுத்துகை உதவியாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை, அந்தந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதிலான தாமதம் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு நடாத்தப்படவில்லை; அதன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ஏற்படவில்லை. |
| 15-1-1-1505 | 375,000 | 193,000 | திணைக்களத்துக்கு தேவையான புத்தகங்களையும் மாத வெளியீடுகளையும் கொள்வனவு செய்வதற்கான விலைக்கேள்விகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், விலைக்கேள்விகள் எவையும் வழங்கப்படவில்லை; ஆதலால் கொள்வனவுகள் எவையும் செய்யப்படவில்லை. |
| 15-1-1-2102 | 500,000 | 290,400 | உதவிச் சட்டவரைஞர்களுக்கான அறைகளை ஒழுங்கேற்பாடு செய்தல் தொடர்பான வேலை தாமதமாகியமையினால், |

| | | | |
|---|---|---|---|
| | | | அதற்கான தளபாடங்களையும் அலுவலகச் சாதனங்களையும் கொள்வனவு செய்வதற்கான அவசியமெதுவும் ஏற்பட்டு இருக்கவில்லை. |
| 15-1-1-240 | 7,000,000 | 3,476,774 | நிதித்தட்டுப்பாடு காரணமாக, வெளிநாடுகளிலான செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு உட்கருதப்பட்ட அலுவலர்களை அனுப்பமுடியவில்லை. |
| மொத்தம் | 13,175,000 | 8,010,733 | |

03. நிதி ஒழுங்குவிதிகள் 94 இன் நியதிகளின்படி, பொறுப்புக்களும் செலவினங்களும் நிதியாண்டுக்காக குறித்தொதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை எச்சூழ்நிலைகளிலும் விஞ்சாதிருக்க வேண்டியபோதிலும், இரு செலவினத் தலைப்புக்களின் கீழான மீதி எஞ்சியிருந்தும் 325,279 ரூபா தொகையினதான பொறுப்பொன்று உள்ளது. மேற்கூறப்பட்டதற்கான விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| செலவினத் தலைப்பு | 2013.12.31 அன்றுள்ள வாறான மீதி | 2013.12.31 அன்றுள்ள வாறான பொறுப்புக்கள் | மீதிக்கு மேலான பொறுப்புக்கள் | விளக்கம் |
|---|---|---|---|---|
| 15-1-1-1402 | 58,099 | 166,287 | 108,188 | 2013 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசிச் சிட்டை 2014 சனவரி மாதத்தில் கிடைக்கப்பெற்றதன் விளைவாக, சிட்டைத் தொகை பற்றி முன்னரே தீர்மானித்தல் இயலுமானதாகவிருக்கவில்லை; அத்துடன் இது, பொறுப்புக்களின் மீதி விஞ்சுவதனை விளைவித்தது. |
| 15-1-1-1403 | 43,567 | 260,658 | 217,091 | 2013 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசிச் சிட்டை 2014 சனவரி மாதத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கிடைக்கப்பெற்றதன் விளைவாக, சிட்டைத் தொகை பற்றி முன்னரே தீர்மானித்தல் இயலுமானதாகவிருக்கவில்லை; அத்துடன் இது, பொறுப்புக்களின் மீதி விஞ்சுவதனை விளைவித்தது. |
| மொத்தம் | 101,666 | 426,945 | 325,279 | |

சட்டவரைஞர்

சட்டவரைஞர் திணைக்களம்

80,அதிகரண மாவத்தை

கொழும்பு 12.

**இத்திணைக்களத்தின் பணிச் செயல் நிறைவேற்றுகையை அதிகரிப்பதற்கு எடுக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட வழிமுறைகள்**

(i) இத்திணைக்களத்திலுள்ள எல்லாச் சட்ட அலுவலர்களுக்கும் பொறுப்பிக்கப்பட்ட பணியைக் கிரமமான அடிப்படையில் தொடர்வதற்கும் (இப்பணி, பாராளுமன்றச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பில் சட்டமூலங்களை வரைதலையும், அத்தகைய சட்டங்களுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களையும், தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை மீளாய்தலையும் வேறு இணைந்த பணியையும் கொண்டுள்ளது) அத்தகைய பணியை 3 மொழிகளிலும் பூர்த்தி செய்வதற்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்துதல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

(ii) அனுபவம் வாய்ந்த சிரேட்ட சட்டவரைஞர்கள் இல்லாமைக்கான தீர்வாக, ஆலோசகர்களின் சேவைகளை ஈடுபடுத்துவதற்கான நடபடிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(iii) சட்ட மூலங்களையும் திருத்தச் சட்டங்களையும் வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்புப் பணியைக் கொள்வதற்குத் தகைமையுடைய மொழிபெயர்ப்பாளர்கள் இல்லை. தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமை காரணமாக (சட்டவாக்க வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்புப் பணியுடன் பரிச்சயமுள்ள) அரச கரும மொழித் திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களின் சேவைகளை ஈடுபடுத்துவது அவசியமாக வந்துள்ளது.

(iv) சட்டவாக்கத்தை வரைகின்ற நடைமுறைக்கு உதவுகின்ற ஆவணப்படுத்துகை மற்றும் பதிப்புத் தொடர்பான பதவிகளிலுள்ள வெற்றிடங்களில் சிலவற்றையேனும் நிரப்புவதற்கென போதிய எண்ணிக்கையினரான அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(v) இத்திணைக்களத்திலுள்ள எல்லா அலுவலர்களினதும் அறிவு, உளச்சார்பு மற்றும் தேர்ச்சிகளைச் சீராக்குவதனை இலக்காகக்கொண்ட பல்வேறு உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் வெளிநாடுகளில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றுவதற்கு அத்தகைய அலுவலருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

(vi) புதிய சிறந்த தொழினுட்பவியல்களினால் முனையப்பட்ட வசதிகளைச் சட்ட அலுவலர்கள் எல்லோரும் பயன்படுத்துவதனை இயலச் செய்வதற்கு இணைய வசதிகளுடனான கணிணிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(vii) இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட A தர நூலகம், சட்டம் என்ற விடயம் பற்றி எழுதப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைச் சட்ட அலுவலர்களுக்கு வழங்குகின்றது.

(viii) இத்திணைக்களத்திலுள்ள எல்லாச் சட்ட அலுவலர்களும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களும் அரசாங்க சேவையின் மதிப்பைப் பேணிக்காக்கும் வகையில் அலுவலக மணித்தியாலங்களின் போது தமது அலுவலக முறையான கடமைகளைப் புரிதல் வேண்டுமென்ற பொருள்பட அவர்களுக்குத் தெளிவான அறிவுறுத்துதல்கள் விடுக்கப்பட்டுள்ளன; சட்ட அலுவலர்களுட்பட பணியாட்டொகுதியின் எல்லா உறுப்பினர்களும் தமது கடமைகளை எடுத்துக்காட்டான முறையில் நிறைவேற்றுகின்றனரென்பது குறிப்பிடப்படுதல் வேண்டும்.